Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 32/2024**

**Deposition of PW.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மோகன் | ஜாதி | : | |
| த/பெ | : | சத்தியசீலன் | தொழில் | : | தனியார் டிரான்ஸ்போர்ட்டில் வேலை செய்கிறேன். |
| கிராமம் | : | மதுரை | சமயம் | : | |
| தாலுகா | : | மதுரை | வயது | : | 56/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.08.2026.

Crl.M.P.No. 831/2025, Dated: 29.01.2026 மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

(எதிரி ஆஜர்)

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரியை உங்களுக்கு எவ்வாறு தெரியும் என்றால் என் அலுவலகத்திற்கு முன்பாக ஜவுளி கடை வைத்துள்ளார். வழக்கு காசோலை தொகையான பணம் கொடுத்ததாக சொல்லும் தேதியில் எதிரி தருமபுரி மாவட்டம், அரூர் என்ற ஊரில் இருந்தார் என்றால் எனக்கு தேதி நியாபகமில்லை, பணம் கொடுத்தது உண்மை. பணம் கொடுத்ததாக நீங்கள் சொல்வது 2, 3 வருடத்திற்கு முன்பு என்றால் சரிதான். நீங்கள் 2, 3 வருடத்திற்கு முன்பு எதிரி பெற்றதாக சொல்லும் தொகை திரும்ப கொடுக்கப்பட்டுவிட்டது என்றும், தற்போது நீங்கள் இந்த வழக்கின் காசோலை தொகையை எதிரி பெற்றார் என்று வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

உங்கள் முன்பாக புகார்தாரர் எதிரிக்கு பணம் கொடுக்கவில்லை என்றும், எதிரி அப்பொழுது காசோலையும் புகார்தாரர் கொடுக்கவில்லை என்றால்

சரியல்ல. ஏற்கனவே கொடுத்த பணத்தை கொடுத்த பிறகும், நீங்களும் புகார்தாரரும் சேர்ந்து இந்த வழக்கை எதிரிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிரி பணத்தை திருப்ப கொடுத்த பின்பும் எதிரியிடமிருந்து அதிக பணத்தை பெற வேண்டும் என்பதற்காக எதிரி மீது தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் சொன்ன தேதியில் எதிரி அங்கு இல்லை என்றும், புகார்தாரரிடம் நீங்கள் சொன்ன விதத்தில் பணம் வாங்கவில்லை என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor